**<u>பத்திரிக்கை செய்தி</u>**

**<u>மாவட்டஆட்சித்தலைவர் அலுவலகம், நாகர்கோவில்</u>**

**H/8105/2020** **நாள்:12.09.2021**

கன்னியாகுமரி மாவட்டத்தில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் பற்றிய மாவட்ட ஆட்சித்தலைவரின் செய்திக்குறிப்பு:-

- தமிழக அரசு உத்தரவின்படி இன்று 12.09.2021 கன்னியாகுமரி மாவட்டத்தில் மெகா தடுப்பூசி முகாம் நடத்தப்பட்டது. அதன்படி 625 தடுப்பூசி முகாம்களில் மொத்தம் **68,346** நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.
- கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆசாரிபள்ளம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலும், களப்பணியாளர்கள் மூலமாகவும், சோதனைச்சாவடிகள் மூலமாகவும் இதுவரை 11,01,004 நபர்களுக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- தற்போது மொத்தம் 124 பேர் கொரோனா சிகிச்சையில் உள்ளனர். இதில் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் 41 பேரும், கோவிட் கவனிப்பு மையங்களில், தனியார் மருத்துவமனைகளில் 83 பேரும் சிகிச்சையில் உள்ளனர்.
- 11/09/2021 அன்று 34 நபர்களுக்கு கொரோனா நோய்த்தோற்று ஏற்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. இதுவரை பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மொத்தம் 58,961 பேர் இதில் 56,759 பேர் முற்றிலும் குணமடைந்து வீடு திரும்பி உள்ளனர்.
- கன்னியாகுமரி மாவட்டத்தில் இன்று (12.09.2021) முதல் கட்ட தடுப்பு மருந்து 49,889 நபர்களுக்கும், இரண்டாம் கட்ட தடுப்பு மருந்து 18,457 நபர்களுக்கும், ஆக மொத்தம் இதுவரை நீரழிவு நோய், இணை நோய் உள்ளவர்கள் 49,975 நபர்களுக்கும், கர்ப்பிணி பெண்கள் 13,695 நபர்களுக்கும், பாலுட்டும் பெண்கள் 12,625 நபர்களுக்கும் கொரோனா தடுப்பு மருந்து செலுத்தப்பட்டுள்ளது. மொத்தமாக இதுவரை முதல் கட்ட தடுப்பு மருந்து 8,58,022 நபர்களுக்கும், இரண்டாம் கட்ட தடுப்பு மருந்து 2,07,124 நபர்களுக்கும் செலுத்தப்பட்டுள்ளது.
- கன்னியாகுமரி மாவட்டத்தில் முககவசம் அணியாதது மற்றும் சமூக இடைவெளியை பின்பற்றாதது ஆகிய காரணங்களுக்காக இன்று மட்டும் 269 நபர்களுக்கு அபராதமாக ரூபாய் 54,100 வசூலிக்கப்பட்டுள்ளது. இதுவரை மொத்தம் 1,20,268 நபர்களுக்கு அபராதமாக ரூபாய் 2,61,41,800/- வசூலிக்கப்பட்டுள்ளது.
- கன்னியாகுமரி மாவட்டத்தில் கீழ்கண்ட தனியார் மருத்துவமனைகளில் கட்டணம் செலுத்தி கொரோனா தடுப்பூசி **Covishield & Covaxin** போட்டுக்கொள்ளலாம். மேலும் அரசு நடத்தும் முகாம்களில் இலவசமாக தடுப்பூசி போடுவதையும் பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

| வ.எண் | தனியார் மருத்துவமனை பெயர்கள் | இருப்பில் உள்ள மருந்து | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | குமாரசாமி ஹெல்த் சென்டர், கொட்டாரம் | 370 | 700 |
| 2 | ஜெயசேகரன் மருத்துவமனை, நாகர்கோவில் | 1110 | 780 |
| | | 870 Covaxin | 1410 |
| 3 | திலகராம் மருத்துவமனை நாகர்கோவில் | 90 | 780 |
| 4 | அன்னம்மாள் மருத்துவமனை குழித்துறை | 300 | 780 |
| 5 | ஹோலிகிராஸ் மருத்துவமனை வெட்டூர்ணிமடம் | 80 | 780 |
| 6 | பென்சாம் மருத்துவமனை வெட்டூர்ணிமடம் | 380 | 780 |
| 7 | சிவா மருத்துவமனை, ஈத்தாமொழி | 320 | 780 |
| 8 | CSI Mission மருத்துவமனை நெய்யூர் | 440 | 650 |
| 9 | மூகாம்பிகா மருத்துவமனை குலசேகரம் | 930 | 780 |
| 10 | சந்திரிகா மருத்துவமனை நாகர்கோவில் | 470 | 780 |
| 11 | பெதஸ்தா மருத்துவமனை நாகர்கோவில் | 470 | 780 |
| 12 | J J Hospital | 480 | 780 |
| 13 | Joseph Sahayam மருத்துவமனை | 470 | 780 |
| 14 | கால்வின் மருத்துவமனை | 460 | 780 |
| 15 | Aditya மருத்துவமனை | 100 Covaxin | 1410 |
| 16 | வசந்தம் மருத்துவமனை | 160 Covaxin | 1410 |

மாவட்ட ஆட்சித்தலைவர்
கன்னியாகுமரி மாவட்டம்.